# IN THE COURT OF THE PRINCIPAL SUB JUDGE, KARUR

| | |
|---|---|
| அசல் வழக்கு எண் | 895/2017 |
| நாள் | 23.03.2026 |
| வா.சா.2 | மோகன்ராஜ் |
| வயது | 32 |
| ஊர் | ராயனூர் |

சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக அனுமதி வழங்கப்பட்டது.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் குறுக்கு விசாரணை**

நான் பி.இ வரை படித்துள்ளேன். நான்பைனான்ஸ் நிறுவனத்தில் வேலை பார்த்து வருகிறேன். தாவா கடனுறுதிச்சீட்டை எழுதிய சமயத்தில் நான் படித்து கொண்டு இருந்தேனா என்றால், இல்லை. நான் தாவா கடனுறுதிச்சீட்டு எழுதிய சமயத்தில் வேலைக்கு செல்லவில்லை. என்னிடம் காட்டப்படும் பிரமாண வாக்குமூலத்தை நான் தான் தாக்கல் செய்தேன் என்றால், சரிதான். வா.சா.1 எனது தகப்பனார் என்றால், சரிதான். எனது பிரமாண வாக்குமூலத்தில் வா.சா.1 எனது தகப்பனார் என்றும், அவர் சொல்லிதான் தாவா கடனுறுதிச்சீட்டை நான் எழுதினேன் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால், சரிதான். தாவா கடனுறுதிச்சீட்டு எழுதுவதற்கு முன்பாக நான் வேறு கடனுறுதிச்சீட்டுகளை எழுதியுள்ளேனா என்றால், இல்லை. நானும், எனது தகப்பனாரும் கூட்டுசேர்ந்து தாவா கடனுறுதிச்சீட்டை மோசடியாக தயார் செய்து இவ்வழக்கில் தாகசுல் செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. இவ்வழக்கில் நான் சாட்சியம் அளிப்பதற்கு முன்பாக நான் பிரதிவாதியை சந்தித்து பேசியது கிடையாது என்றால், சரியல்ல. மாவுமில் வைத்திருந்தபோது, பிரதிவாதியுடன் பேசி பழகியுள்ளேன். நான் பிரதிவாதியை ஒருபோதும் பார்த்து பேசியது இல்லை என்றால், சரியல்ல. தாவா கடனுறுதிச்சீட்டில் முதல் கையொப்பத்தை

கோபாலகிருஷ்ணன் தான் செய்தார். நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது. மறுவிசாரணை இல்லை.</u>**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு
படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்
கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.
ஒ/ம். திரு. வேடியப்பன்
முதன்மை சார்பு நீதிபதி,
கரூர்.